# புறநானூறும் புகழும்

***முனைவர் ரா.திவ்யா***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.*

ஒருவருக்குப் பொருள் கொடுத்து உதவுதலே கொடையாகும். கொடைத் தன்மையைப் பண்டைக் காலத்தில் இருந்த மக்கள் தங்கள் உயிரினும் மேலாகப் போற்றி வந்தனர். செல்வம் அதிகமாக உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடையாகத் தந்து உதவினார்கள். புலவர்களின் வறுமையினை நீக்குவதற்காகக் கொடை கொடுத்துக் காத்தனர். கொடையில் மேம்பட்டு விளங்குவது தலைசிறந்த பண்பாடாகப் போற்றப்பட்டது. தம்மை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாத பண்பினை அரசர்கள் கொண்டிருந்தனர். தங்களையும், தங்களின் ஆட்சி முறைகளையும் வாழ்த்திப் பாடும் பாணர், புலவர் முதலான இரவலர்களுக்கு உணவு, உடை, பொன் முதலான பொருட்களை அவர்களின் வறுமையைப்போக்குவதற்காகக் கொடையாகக் கொடையாகக் கொடுத்துள்ளனர்.

“அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு”(குறள்.382)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். அரசனுக்குரிய இயல்பாக உள்ள ஈகைப் பண்பு அரசனுடைய புகழை நிலைநாட்டும் என்று கூறுகிறார்.

**கொடை**

கொடையில் சிறந்த குறுநில மன்னர்களும் பெறுநில மன்னர்களும் வேந்தர்களும் மேலாகப் போற்றப்பட்ட பாங்கினை இலக்கியங்கள் காட்டுகின்றன. மன்னர்கள் கொடைமடம் பட்டதனையும் புலவர்கள் காட்டியுள்ளனர். பாடி வருகின்ற புலவர்களுக்குப் பல ஊர்களை வழங்குவதிலும் சிறந்து விளங்கியுள்ளனர். வறுமையில் உள்ள மனிதனின் துன்பத்தினைத் துடைக்க உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைப் பாணவர்களுக்குக் குறைவில்லாமல் வழங்கப்பட்டன என்பதனை புறநானூற்றில் அறிய முடிகிறது. வயிராற உணவிட்டு உயர்ந்த விலை மதிப்புடைய ஆடைகளைப் பரிசாகக் கொடுப்பது வழக்கமாக இருந்திருக்கின்றது. பழைய ஆடைகளுக்குப் பதிலாக புதிய ஆடைகளை உடுத்தச் செய்தனர்.

“தேம்பாய் உள்ள தம்கமழ் மடர் உள
பாம்பு உரி அன்ன வடிவின” (புறம்.383:8-9)

பாம்பு தன் உடம்பிலுள்ள தோலைச் சில நாட்கள் கடந்த பின்பு உரித்து விட்டுச் சென்று விடும். இந்தப் பாம்புச் சட்டையைப் புலவர் வறுமைக்கு உவமையாக்குகின்றார். இதில் பாணர்களின் வறுமையைப் போக்கியவர்கள் மன்னர்கள் என்பதை அறியமுடிகிறது.

ஒருவன் பசியோடு இருந்தால் கூட அவனைப் பார்த்தால் ஏழை என்றோ வறுமையுற்றவன் என்றோ அடையாளப்படுத்துவது முடியாது. அவன் ஆடையே உயர்வானவனாகவும், வறுமையுற்றவனாகவும் வெளிக்காட்டுகிறது. எனவே தான் புறநானூற்றில் ஆடை கொடுத்து உதவினர். ஒருவன் கொடுக்கும் பொருளானது அருள் உள்ளத்தோடு கொடுக்கப்படும் போது அவற்றைப் பெற்றுக் கொள்பவர் அப்பொருளின் முழுப்பயனையும் அடையக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

பின்னாளில் தங்களின் பிள்ளைகளுக்கும் ஆகுமென்றும், உதவுமென்றும் செல்வத்;தினைச் சேர்க்காமல் தன்னிடம் இருப்பதை எல்லோருக்கும் அளித்து வந்த இணையற்ற வாழ்வினைக் காணமுடிகிறது. மனித நேயத்தின் மற்றொரு வடிவமே கொடையாகும். பிறருக்குக்

கொடுப்பதற்கும் ஒரு மனம் வேண்டும். அவற்றிலும் தான் கொடுப்பதற்கு நிகராக வேறு பொருளைப் பெறாதிருப்பது மிகவும் பெரிய கொடையாகும்.

"இன்று செலினும் தருமே"(புறம்.171:1)

என்று இப்பாடல் பிட்டங்கொற்றனின் கொடைவளத்தினைப் பற்றி எடுத்துரைக்கிறது. ஊர்களைப் பரிசாகக் கொடுக்கும் பெரிய நாடோ, ஒட்டு மொத்தமாக இரவலரின் வறுமையை ஒழிக்கும் பெரும் செல்வ வளமோ அவனிடம் இல்லை. ஆனாலும் தன்னிடம் வந்து இரந்து நின்றவர் மற்றொருவனிடம் சென்று கை ஏந்தக்கூடாது என்று அவன் நினைக்கின்றான். இந்த மனித நேயப் பண்பே கொடைக்குக் காரணமாக அமைகின்றது.

**கொடைப் பெருமை**

நாஞ்சில் வள்ளுவனின் கொடைப் பெருமையினைப் பழிப்பது போலப் புகழ்ந்துள்ளார் ஔவையார்,

"அரிசி வேண்டினேமாக, தான்பிற
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னது ஓர்
பெருஞ் களிறு நல்கியோனே அன்னது ஓர்
தேற்றா ஈகையும் உளதுகொல்?
போற்றார் அம்ம பெரியோர் தம் கடனே?(புறம்.140:5-10)

என்ற பாடலில் அரிசியை வேண்டினோம் அவன் எம்முடைய வறுமையினைப் பார்த்து யானையை அளித்தான். அவன் குறைந்த அறிவினை உடையவன். ஒருவருக்கு ஒன்னைக் கொடுக்கும் போது தெளிவின்றிக் கொடுப்பான். தாம் செய்ய வேண்டிய முறையறிந்து செய்ய மாட்டான். என்ற ஔவையாரின் பாடல் நாஞ்சில் வள்ளுவனின் கொடைப்பெருமையை விளக்குகிறது.

**உயர்ந்த கொடைத்திறன்**

வள்ளல்கள் தங்களுடைய ஊரையும் பெயரையும் தெரிவிக்காமல் இரவலர்களின் பசியினைப் போக்குவதற்காகப் பொருளுதவி செய்தல் உண்யிலே போற்றவதற்குரிய கொடைத்திறனாகும்.

"மார்பில் பூண்ட வயங்கு காழ் ஆரம்
மடை செறி முன்கைக் கடகமொடு ஈத்தனன்
எந்நாடோ? என நாடும் சொல்லான்
யாரீரோ? என பேரும் சொல்லான்
பிறர் பிறர் கூற வழிக் கேட்டிசினே"(புறம்.150:20-24)

இரவலன் ஒருவன் வருத்தத்துடன் பலா மரத்தடியில் சுற்றத்தாருடன் தங்கியிருந்த போது, அங்கு வந்த வேட்டுவன் ஒருவன் விலங்கின் ஊனினைத் தீயில் சுட்டு அவர்களை உண்ணச்செய்வதோடு தான் காட்டு வழியிலே இருப்பதால் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்று கூறித் தன் மார்பிலே அணிந்திருந்த முத்து வடத்தினையுடைய ஆரத்தினையும், கைக்கு அணிந்திருந்த கடகத்தையும் கொடுத்தான். அவனது பெயரையும், நாட்டையும் கேட்டபோது அவன் கூறாமல் போய்விட்டான் என்று வழியில் பிறரைக் கேட்டபோது அவன் வள்ளல் தன்மையை உரைக்கிறார்.

கண்டீரக்கோப் பெருநள்ளி இரவலர்க்கு உணவும், பரிசிலும் கொடுத்துத் தன்னுடைய பெயரையும் நாட்டையும் சொல்லாது சென்றது அக்கொடையைப் பெயரையும் நாட்டையும் சொல்லாது சென்றது அக்கொடையைப் பெயருக்காகவும், புகழுக்காகவும் செய்யாமல் பசியினாலும் வறுமையினாலும் துன்புறும் இரவலர்களின் துன்பத்தை நீக்கக் கொடுத்த உயர்ந்த கொடைத்திறனைச் சுட்டுவதாக அமைகிறது.

கொடைச் சிறப்பு

கொடைச் சிறப்பினைப் பல பாடல்கள் வற்புறுத்திக் கூறுகின்றன.
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே (புறம்.189:7-8)

செல்வத்தினைப் பெறுகின்ற பயனாவது பொருளைக் கொடுப்பது ஆகும். அப்படி செய்யாதவர்க்கு அறம்.பொருள், இன்பம் என்ற மூன்றையும் பெற மாட்டார்கள் என்று மதுரைக் கணக்காயனார் கூறுகிறார்.

இரவலர்க்கு ஒன்றும் தர முடியாத நிலையில் ஒருவன் உயிர் துறப்பதே மேல் என்று சங்க இலக்கியம் கூறும் கபிலர் தம் கலித்;தொகைப் பாடல்களில் அறிவிக்கிறார்.

"இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்க லாற்றாக்கால்
தன் மெய் துறப்பான் மலை" (கலி.43)

"ஈதல் இரந்தார்;க்கு ஒன்று ஆற்றாதான் வாழ்தலின்
சாதலும் கூடுமாம் மற்று" (கலி.61)

கொடையின் கட்டாயத்தினைக் கூறுவதோடு கொடுக்க முடியாத நிலையான மிகுந்த துன்பத்தினைத் தரும் என்பதனையும் எடுத்துரைக்கிறார்.

"இளஞ்சேட் சென்னி பாணர்களுக்குப் பகைவர் நாட்டின் கோட்டைகளைப் பரிசிலாகக் கொடுத்தவன்" (சங்க காலத் தமிழக வரலாறு, ப.77) என்று மயிலை சீனி வேங்கடசாமி சோழனின் கொடைச் சிறப்பினைக் கூறுகிறார்.

மனிதன் தன்னுடைய வாழ்நாளில் முடிந்த அளவிற்குக் கொடையளித்து வாழ்தல் கொடைச் சிறப்பாகும். இவ்வுலகில் செல்வம் பலரிடம் இருந்தாலும் ஒரு பொருளையும் கொடுக்காமல் இறந்து போகக் கூடியவர்களும் உள்ளனர். ஆனால் தனக்குக் கிடைத்தப் பொருளைச் சிறய அளவாவது இரவலர்க்குக் கொடுத்துக் குறுநில மன்னர்கள் வாழ்ந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்களால் அறிய முடிகிறது. பலரோடு சேர்ந்து உணவினைக் கொடுத்து எண்டதோடு கொடையினை வேண்டிய நேரத்தில் புலவர்களுக்கு அளித்தும் உள்ளனர்.

கொடையாண்மை

பாரி தன்னிடம் உதவி வேண்டி எவர்வரினும் அவர்களுக்கு வேண்டியவை செய்து பொன்னும் பொருளும் கொடுத்துப் போற்றத் தயங்கியது இல்லை. அளவில்லாமல் வழங்குகின்ற பெரும் கொடைப்பண்பு அவனிடத்தில் இயல்பாகவே இருந்துள்ளது. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று அவன் வேறுபாடு கருதித் தரம் பார்த்துத் தருவதில்லை. இரப்பவர்கள் எந்த தன்மையர் என்று எண்ணாமல் எல்லோர்க்கும் அவன் கொடை கொடுத்து வந்தான். இதனை,

மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண்மையே(புறம்.106:4-5)

என்னும் கபிலர் பாடல் வெளிப்படுத்துகிறது. அவன் ஒரு குறுநில மன்னன் எனினும் வறியோர்க்கு வாரி வழங்குவதில் மூவேந்தரையும் விட பாரி சிறந்தவன் ஆகிவிட்டான். பறம்பினை மூவேந்தர்கள் முற்றுகை இடுவதற்கு இக்கொடையும் காரணமாக அமைந்தது என அறிய முடிகிறது.

கொடைத்திறம்

தன்னை நாடி வந்தவர்களுக்கு நல்ல மனதோடு பொருட்களையெல்லாம் கொடுத்து வறுமையை நீக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் சங்க கால மன்னர்கள். தங்களின் பொருள்கள் அடுத்தவர்க்குப் பயன்படும் போதும் பொருட்கள் பெறும் அவர்களின் மகிழ்வு கண்டு மனநிறைவு கொள்வதும் அவர்களின் உயர்ந்த குணமாகும். சங்க கால மன்னர்களின் வள்ளன்மையைச் சங்கப் பாக்கள் பல எடுத்துரைக்கின்றன. தன் செல்வம் தனக்கின்றிப் பிறருக்குப் பயன்பட வேண்டும் என்னும் உயரிய மனத்தைச் சங்க கால மன்னர்களின் வள்ளன்மையைச் சங்கப் பாக்கள் பல எடுத்துரைக்கின்றன. தன் செல்வம் தனக்கின்றிப் பிறருக்குப் பயன்பட வேண்டும் என்னும் உயரிய மனத்தைச் சங்க இலக்கியங்களிலே தான் காண முடிகிறது. மன்னர்கள் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் உள்ளம் படைத்தவர்கள்

இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருகென விழையாத் தாஇல் நெஞ்சத்துப்
பகுத்தூண் டொகுத்த ஆண்மைப்

பிறர்கென வாழ்தி நீ யாகன் மாறே (பதி.38:13-16)

இனியவற்றைப் பெற்றபோது தான் மட்டும் தனித்து உண்ண விரும்பாமல் பிறருக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணும் தன்மை பெற்ற மன்னன் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவன் என்பதை இப்பாடல் எடுத்துரைக்கிறது. தாம் இவ்வளவு பொருளினைக் கொடுத்து விட்டோமே நமது பொருளானது பிறர்க்குப் போகிறதே என்று மன்னர்கள் எண்ணுவதில்லை. கொடுப்பதினால் வருகின்ற புகழினையும் பெரியதாக எண்ணுவதில்லை.

இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்
நல்லது வெஃகி வினை செய்வார்(பரி.10:87-88)

தன்னை நாடி வந்தர்களுக்கு இல்லை என்னும் சொல்லையே இல்லை என்று ஆகின்ற சொல்லாம் படி கொடுத்து மகிழ்ந்தவர்கள் மன்னர்கள் இரவலாக வந்து கையேந்தி நின்ற போது கைநிறையப் பொருள் கொடுத்துத் தொடர்ந்து வரும் இரவலர்க்குப் புதிய புதிய பொருள்களையும் கொடுத்து மகிழந்தனர்.

இரப்போர் ஏந்துகை நிறைய புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந்துவக்கும்
அரும்பொருள்.........(அகம்.389:11-13)

பொருளைப் படைத்தவர்கள் அதனைப் பிறர்க்குக் கொடுத்தலும் இல்லாதவர்கள் இருப்பவரை நாடிச் செல்லுதலும் இயற்கை இது விண்ணுலகில் நடைபெறுவது இல்லை. நம் நாட்டில் தான் உண்டு என்று கிள்ளிவளவனின் கொடைத்திறனைப் புகழ்கிறார்.

“படை வேண்டு வழி வாள் உதவியும்
வினைவேண்டுவழி அறிவு உதவியும்
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து”(புறம்.179:6-8)

வேண்டியவர்களுக்கு வேண்டியன தருவதே கொடையாகும். தனக்கு வேண்டாதவரை ஒதுக்குதல் கொடையின் சிறப்பன்று எனக் கூறுகிறது. இப்பாடல் மன்னனை நாடிச் சென்று புலவர்கள், இரவலர்கள், பரிசில் பெற இயலாத நிலையில் அவனுக்கு ஏற்படும் துன்பம் அளவில்லாதது. பொருள் கொடுக்க முடியாத நிலை புரவலனுக்கு ஏற்படுகின்ற போது பெருந்துன்பமாக அமையும் என அறிய முடிகிறது.

“பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என
நாடு இழந் ததனினும் நனி இன்னாது என”(புறம்.165:10-11)

தன்னை நாடி இரப்பவர்களுக்குப் பொருளினை எப்படியாயினும் முயற்சி செய்து கொடுப்பது நற்செயலாகும்.

“பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ மற்று இது- விறல் மாண் குடுமி
இன்னா ஆகப் பிறர் மண் கொண்டு
இனிய செய்தி நின் ஆர்வலர் முகத்தே”(புறம்.12)

இப்பாடலானது பாடிவரும் பாணர்க்குப் பொற்றாமரைப் பூவையும், புலவர்களுக்கு அலங்கரிக்கப்பட்ட யானை உடைய தேரினையும் வழங்கிச் சிறப்பித்தவன் முதுகுடுமிப் பெருவழுதி என்னும் குறிப்பைத் தருகிறது. இன்னார்க்கு இதைக் கொடுக்க வேண்டும் என்னும் மரபில்லாமல் நினைத்த போதெல்லாம் கொடுத்து மகிழும் தன்மையுள்ளவனாகக் குறிப்பிடுதை அறியலாகிறது.

எல்லோர்க்கும் எல்லாப் பொருள்களையும், வரையாது வழங்கும் மன்னனே நீ சிறப்புடன் வாழ்வாயாக என்று புறநானூற்றில் 17ம் பாடல் மன்னனை வாழ்த்துகிறது. சோழன் நலங்கிள்ளி வரையாது வழங்கும் வள்ளன்மை பெற்றவன். தன்னை நாடி வந்தவர்க்குப் பிற வாயில்களை இரவலர்கள் வந்து அடைவதற்கு முன்னரே கொடுக்கும் குணத்தினை உடையவன் புறம்.68 என்று கொடைத்திறனைக் கூறுகிறார்.

"மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்
ஆடுவண்டு இமிரா அழல் அவிர் தாமரை
நீடும் இரும் பித்தை பொலியச் சூட்டி
.......................................................
துணை புணர் தொழில் நால்கு உடன்பூட்டி

அரித்தேர் நல்கியும் அமையான்"(பெரும்பாணாற்றுப்படை 480-490)

பொன்னால் செய்யப் பெற்ற தாமரை மலரினைத் தலையிலே சூடுமாறு தந்து நல்குபவனாகிய குதிரைகள் பூட்டிய தேரையும் கொடையாகக் கொடுக்கும் இயல்புடையவன் எனத் தொண்டைமான் இளந்திரையனைப் பெரும்பாணாற்றுப்படை புகழ்கிறது.

"பண்டைய மன்னர்கள் தாம் சேர்த்து வைத்த பொருள்களைக் கொடுத்து மகிழ்வதில் உயர்ந்த எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர். பிற நாடுகளை வென்று பெற்ற பொருள்களில் பெரும்பான்மையானவற்றைத் தன்னனை நாடி வரும் இரவலர்களுக்கும், புலவர்களுக்கும், பாணர்களுக்கும், விறலியர்க்கும் கொடுக்கும் குணம் உடையவராக இருந்தனர். கொடுப்பதால் தன்னிடம் உள்ள பொருள் வளம் குறையுமே என்று எண்ணாமல் கொடுத்து மகிழ்வதிலே இன்பம் கண்டனர். தன்னை நாடி வருகின்ற இரவலனைக் காத்தல் தங்கள் கடமை என்று எந்நிலையிலும் கொடைத்தன்மையில் சிறந்து விளங்குகின்றனர். ஒருமுறை தன்னை நாடி வந்தவர் மற்றொரு முறைவரினும் அவர்களை வரவேற்றுப் போற்றி வேண்டுமளவு பொன்னும் பொருளும் கொடுத்துப் புலவர்களின் பெரிய சுற்றம் துயரமின்றி வாழக் காரணமாக இருந்தனர். என்ன கொடுக்கிறோம் என்று அறியாமலேயே சிறிய அளவு பொருள் கேட்பவர்க்கு மலையளவு வழங்கிய மனத்தையும் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன"(சங்க இலக்கியங்களில் அறக்கருத்துக்கள், ப.132) என இரா.அனுராதா கொடைத்திறனைப் பற்றிக் கூறுகிறார்.

**கொடைப்புகழ்**

கொடைப் பண்பானது பெரிதும் போற்றப்படுகின்ற சூழலில் மன்னர் சிலர் மட்டுமே கொடைப் பண்பினைப் போற்றிய நிலையில் வரிசை அறிதல் என்னும் பண்பால் கொடை வரையறைப்படுத்தப்பட்ட நிலையில் கொடையும் சிறப்பாகக் காட்டப்படுகிறது. மறுமை வாழ்வினைக் காட்டி,

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்"(புறம்.27:7)

எனக் கொடை வலியுத்தப்படுகிறது.

"மறுமை நோக்கின்றோ அன்றே

பிறர் வறுமை நோக்கின்றோ, அவன் கைவண்மையே"(புறம்.27:7)

அளவில்லாமல் கொடுப்பது மறுமைப் பயனை நோக்கியது இல்லை. வறுமைத் துன்பத்தைப் போக்குவதாகும் என பரணர் கூறுகிறார்.

"பிறர் வறுமையைப் போக்குதலை அடிப்படையாய்க் கொண்டு இம்மை வாழ்வு நோக்கிய கொடை எனும் இருவகைக் கொடைகளைக் காட்டுவது இருவேறு சமுதாய இயல்பை வெளிப்படுத்துகிறது" (சங்க கால இனக்குழச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்-ப.141) என பெ.மாதையன் கொடைப் புகழைப் பற்றிக் கூறுவதைக் காணமுடிகின்றது.

**கொடுக்கும் முறை**

தமிழர்களிடம் காணப்பட்ட கொடைப்பண்பு அதனை மகிழ்வுடன் கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும். மன்னன் பரிவுடன் பகை செய்தமை இலக்கியங்கள் காட்டுகின்றன. ஆனால் மகிழ்வுடனும் கொடுத்துள்ளனர்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கம் குழையும் விருந்து"(குறள்.90)

விருந்தினர் முகந்திரிந்து நோக்கினால் வருந்துவர். ஆனால் மன்னர்கள் கொடை அளிக்கும் போது இன்முகத்துடன் பரிசில்களை அளித்து முதல்நாள் புலவர்க்ள வரும்போது செய்த சிறப்புச் செய்து வழியனுப்பி உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**கொடைக்குணம்**

கொடை தருகின்ற குணமானது மனிதனுக்கு இயற்கையாகவே இருத்தல் வேண்டும். தன்னுடைய சிறப்பினைப் பரப்புவதற்காகக் கொடை தருவதில்லை. இதனை ஊன்பொதி பசுங்குடையார்,

"கழிந்தது பொழிந்து என வான் கண்மாறினும்
தொல்லாது விளைந்து என நிலம் வளம் கரப்பினும்
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை
..........................................................................
பூண் கடன் எந்தை! நீ இரவலர்ப் புரவே"(புறம்.203)

மழையானது காலங்காலமாகப் பெய்து கொண்டிருக்கின்றோம் என்று நினைத்துப் பெய்யாது விட்டாலும், நிலம், பொருள் விளைத்துக் கொண்டே இருக்கின்றோம் என்று நினைத்து விளையாமல் இருந்துவிட்டால் இவ்வுலகில் உயிரினங்கள் உயிர் வாழ முடியாது. மழையும் நிலமும் பயன் கருதாமலே கொடை வழங்கியுள்ளன எனப் புலவர் கூறக் காரணம் மனிதன் அவற்றைப் போலவே என்பதை வலியுறுத்துவதாகும். இதனையே, "ஆருயிர்கட் கெல்லாம் நாம் அன்பு செய்தல் வேண்டும் "(இலக்கியச் சிந்தனை, ப.86) என கு.வெ.பாலசுப்பிரமணியம் தனது நூலில் வள்ளலாரின் பெருங்கருணையைப் பற்றிக் கூறியிருப்பது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

வள்ளல்களின் கொடை

தன்னை நாடி வருபவர்களுக்குக் கொடுத்து மகிழ்பவர்கள் வள்ளல்கள் என அழைக்கப்படுகின்றனர். அவர்களில் பாரி, காரி, ஓரி, அதியமான், பேகன், ஆய் அண்டிரன், நள்ளி போன்றவர்கள் கொடையில் வள்ளல்களாகத் திகழ்ந்தனர்.

"தலையெழு வள்ளல்களாக சகரன், காரி, நளன், நந்துமாரி, நிருதி, செம்மியன், விராடன் ஆகியோர் கூறப்படுகின்றனர். இடையெழு வள்ளல்களாக சுக்குரன், அந்திமான், கண்ணன், சந்தனன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன் ஆகியோர் கூறப்படுகின்றனர். கடையெழு வள்ளல்களாக பாரி, பேகன், ஓரி, காரி, அதியமான், ஆய், நள்ளி ஆகியோர்"( இலக்கியப்பேழை, ப.32) என்று க.நஞ்சையன் கடையெழு வள்ளல்களின் கொடைத்திறம் என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

தலையெழு, இடையெழு வள்ளல்களுக்கு இணையாகக் கடையெழு வள்ளல்கள் பொருளினைத் தந்துள்ளனர். பத்துப்பாட்டு நூலான சிறுபாணாற்றுப்படையில் நத்தத்தனார் இவ்வள்ளல்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

"வள்ளல் எனும் சொல்லுக்கு வாரி வழங்கும் கொடையுள்ள கோமான் எனப் பொருள் கூறலாம்.(இலக்கியம் காட்டும் இணையற்ற நண்பர்கள்.ப.9) என்று பே.வி.கலைமணி விளக்கம் தருகிறார்.

"அறங்களில் எல்லாம் சிறந்த அறம் கொடை கொடுப்பது"(தமிழ்நாட்டுக் கலைஞர்கள், ப.31) என்று நா.இராமையா கூறுகிறார். கடையெழு வள்ளல்கள் கொடையிலே சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை மேற்கண்ட சான்றுகள் வழி அறியமுடிகின்றது.

அதியமானின் கொடைப்பண்பு

அதியமான் நெடுமானஞ்சயிடம் பரிசிலுக்காகச் செல்பவர்கள் உறுதியாகப் பொருளைப் பெறுவர்.

"ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினள் மாதோ

இழைஅணி யானை இயல் தேர் அஞ்சி

……………………………………………………………

அருந்த ஏமாந்த நெஞ்சம்!

வருந்த வேண்டா, வாழ்க அவன் தாளே"(புறம்.101)

என ஔவையார் நாம் ஒரு நாள் மட்டுமின்றி பல நாளும் பலரோடு நாள்தோறும் சென்றாலும், முதல் நாள் சென்ற போது எத்துணை விருப்பமுடன் வரவேற்றானோ, அத்தனை விருப்பத்தோடு வரவேற்பான். காலம் நீட்டித்தாலும், நீட்டிக்காமல் இருந்தாலும் நமக்குப் பரிசில் கிடைப்பது உறுதியாகும் என அதியமானின் கொடைப் பண்பினைக் கூறுகிறார். அவனிடம் எப்பொழுது சென்றாலும் பரிசிலர்கள் பொருளைப் பெறுவது உறுதி என உணர்த்துகிறார்.

"நீலமணி மிடற்று ஒருவன் போல
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் அகத்து அடக்கி

சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே"(புறம்.91:9-11)

அதியமான் பெரிய மலை உச்சியில் சிறந்த சிறிய நெல்லிக்கனியினைப் பெறுவதற்கு அரியது என்று நினைக்காமல் அதனுடைய பயனைக் கூறாமல் ஔவையாருக்குக் கொடுத்தான். அதன் பின் அக்கனியின் பயனைக் கூறினான். மற்றவருக்குக் கொடுத்து அதனால் உள்ளம் மகிழ்வடைவான் என அதியமானின் கொடை உள்ளத்தையும் சிவபெருமானின் தோற்றமாக அவன் அருள் உள்ளத்தை ஔவையார் கூறுகிறார்.

அதியமான் இரவலருடைய அழுக்கேறிய உடைகளைக் களைந்து நல்ல உடைகளை வழங்குவான். மதுவும், உணவையும் வெண்கலத்திலே தந்து உண்ணச் செய்வான்.

"பகடு தரு செந்நெல் போரோடு நல்கி

கொண்டி பெறுக! என்றோனே"(புறம்.390:22-23)

நெல்லையும், பொன்னையும் வருபவர்க்குக் கொடுப்பான் என்று அதியமானின் கொடைப்பண்பை ஔவையார் கூறுகிறார். பொருள்மிக உடையவனாயின் பரிசிலர்க்குக் கொடுத்து எஞ்சியதைத் தான் உண்ணுவான். தன் படைவீரர்களுக்குத் தரும் பொருள்களைவிட மிகுதியாகத் தன்னை அடையும் இரவலர்களுக்கு கொடுப்பான் (புறம்.315) என்று அவன் வள்ளல தன்;மையைப் பாராட்டப்படுகிறது. இரவலர்க்குக் கொடுத்து எஞ்சியதை உண்ணும் அதியமானின் அருள் தன்னை இதனால் விளங்குகிறது.

"ஓவாது ஈயும் மாரி வண்கை

கடும் பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி"(குறுந்தொகை 91:5-6)

அதியமான் காலத்தையும் இடத்தையும் பெறுபவரின் தகுதியையும் நோக்காமல் எப்பொழுதும் கொடுக்கும் இயல்பினையுடையவன். மேகம் போன்று கைம்மாறு கருதாத வண்மையை உடையவன் என்று கூறுகிறார்.

"கடும் பகட்டு யானை நெடுமான் அஞ்சி
ஈரு நெஞ்சமோடு இசை சேண் விளங்க
தேர் வீச இருக்கை போல

மாரி இரீ இ மான்றன்றால் மழையே"(நற்.381:7-10)

அஞ்சி என்பவன் இரக்கம் மிகுந்த உள்ளத்தோடு தன்னுடைய புகழ் நெடுந்தொலைவில் சென்று நிலைக்கும்படி தேர்களைப் பரிசாகக் கொடுப்பான் என்று நற்றிணைப் பாடலொன்று கூறுகிறது.

**பொகுட்டெழினியின் கொடைச்சிறப்பு**

"நுண்நூல் கலிங்கம் உடீஇ உண் எனத்

தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்"(புறம்.392:15-16)

என ஔவையார் அதியமானின் மகன் பொகுட்டெழினியின் கொடைச் சிறப்பினைச் சித்தரிக்கின்றார். பொகுட்டெழினியை நெடுநாள் வாழ்க என்ற பாட உடனே அவன் பொருநனின் கிழிந்த உடையைக் களைந்து நுண்ணிய நூலால் ஆன உடையைத் தந்து உடுத்துமாறு செய்து கள்ளைப் பொற்களத்தில் ஊற்றி முறைப்படி அவனை இருக்கச் செய்து சிறப்பித்தான் என்று கூறுகிறார்.

பாரியின் கொடைச்சிறப்பு

"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கி;ய
பிறங்கு வெள்ளருவி விழும் சாரற்
பறம்பிற கோமான் பாரி"(சிறுபாண்.89-91)

பாரி முல்லைக்கொடி படர்ந்து ஏறுவதற்குரிய கொம்பு இன்றி வருத்தமுறுவதைக் கண்டான். அவன் உள்ளம் துடித்தது. தான் ஏறிவந்த அழகிய தேரை அது பற்றிப் படரும் வகையில் அதனருகே நிற்க வைத்துத் தான் கால் நோக நடந்து மாளிகைக்கு வந்தான். பாரியின் உள்ளப் பாங்கும் அவனது கொடையின் சிறப்பும் பலரும் உணரும் வகையில் புதுமையாக உள்ளன. இதனை சிறுபாணாற்றுப்படையால் அறியமுடிகிறது.

"நீரினும் இனிய சாயற்
பாரி வேள் பால் பாடினை செலினே"(புறம்.105:7-8)

பாரி வள்ளல் தன் பறம்பு மலையில் இருந்து கொண்டு பிறருக்காக இறங்குகின்ற மிக மென்மைத்தன்மை வாய்ந்தவன். அவனை நம்பிச் செல்லும் விறலி பொருளினைப் பெறுவாள்.

"மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண்மையே"(புறம்.106:4-5)

அறிவாலும் குணத்தாலும் செயல்களாலும் தாழ்ந்தவர் வரினும் கொடுக்கும் தன்மையை உடையவன் என்று கபிலர் உணர்த்தகிறார். பரிசிலர் தன்னையே விரும்பினால். அவன் அவர்களுடனே மனம் விரும்பிச் செல்லுகின்ற மனநிலையை உடையவன்(புறம்.108) என்று கூறுகிறார்.

"கடந்து அடுதானை மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே
முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல்நாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டு- நீர் பாடினிர் செலினே"(புறம்.110)

பறம்பு நாடானது முந்நூறு ஊர்களைக் உடையது. அந்த முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். நீங்கள் பாடிக்கொண்டு வந்தால் நானும் பாரியும் இருக்கின்றோம். அதுவல்லாமல் மலையும் உண்டு எனக் கூறுகிறார். இவற்றில் பாரியின் பறம்பினை முற்றுகை செய்து பெற்றுவிடலாம் என்று வந்தால் அதனை அடைவது இயலாத ஒன்றாகும். அவனைப் பாடி வந்தீர்களாயின் அப்பறம்பினைக் கொடையாகப் பெற்று விட முடியும் என கூறுகிறார்.

அவனது அரண்மனை விருந்தில் மதுவும் ஆட்டு இறைச்சியும் ஊனசோறும் சிறந்த இடம் பெறும்(புறம்.113) நிழல் இல்லாத நெடிய வழியிலே தனிமரம் இருந்து வழிப்போக்கரை இன்பமடையச் செய்வதைப் போல பாரி எளியவர் வறுமை நோயினை நீக்குகின்ற அருமருந்தாய் விளங்குகிறான் (புறம்.119) என பாரியின் கொடைச் சிறப்பினை அறியமுடிகிறது.

"பூத்தலை அறாஅப் புனை கொடி முல்லை
..............................................................................
கறங்கு மணி நெடுந்தேர் கொள்க! என்க் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி"(புறம்.200:9-12)

என்னும் பாடலில் பாரியின் அருள் உணர்வைக் கபிலர் எடுத்துரைக்கிறார். இப்பாடலில் மனிதனுக்கு எல்லா உயிர்களிடத்தும் அன்பும், கருணையும் தோன்றுதல் வேண்டும். இரவலர்க்கு முந்நூறு

ஊர்களை வழங்கியவன் முல்லைக்குத் தேரினைக் கொடுத்தது அவனின் வள்ளல் தன்மையை இயல்பாகக் காட்டுகிறது. இதனையே வள்ளலார், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று உயிர்களிடத்து கருணை கொள்ளுதல் வேண்டும் என்று கூறுகிறார். பாரியும் அதுபோலவே வாடிய முல்லையைக் கண்டு வருந்தி அதற்குத் தேரினைக் கொடுத்த பண்பு போற்றற்குரியதாகும்.

“பாரியும் பேகனும் தம்முயிர் போலப் பிற உயிர்களையும் மதிக்கும் மாண்புடையவர்கள்” (வே.முத்துலக்குமி- தமிழரின் வாழ்வியல் நெறிகள், ப.49) என்பதை மேற்கண்ட சான்றுகள் வழி அறியமுடிகின்றது.

**திருமுடிக்காரியின் கொடை வளம்**

காரியின் வீரச்சிறப்பினையும், கொடைச்சிறப்பினையும், மனிதநேயப் பண்பினையும் கண்டு கபிலர் வியந்தார்.

“தொலையா நல்லிசை விளங்கும் மலையன்
மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே”(புறம்.123:3-6)

மலையமான் மதுவினை உண்டு மகிழ்ந்திருக்கும் நேரத்தில் அல்லாமல் தான் மதுவினை உண்டு மகிழாத நிலையிலும் இரவலர்க்கு வழங்கப்பட்ட தேர்கள் முள்ளூர் மலையுச்சியில் உண்டான மழையினும் பலவாகும் எனக் கபிலர் பாடல் கூறுகிறது. இதனால் விலையுயர்நத தேர்களை வழங்குகின்ற கொடைவளம் தெளிவாகிறது.

ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கும்போது மட்டுமல்லாமல் எந்தச் சூழ்நிலையிலும் கொடை வழங்குவது இயற்கையாகும். பெற்ற செல்வத்தை வழங்கிப் பெறும் புகழை விரும்புவது இல்லை என உணரமுடிகிறது.

“டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் மதுவை உண்ட மகிழ்ச்சியால் கொடுக்கப்படும் கொடை செயற்கைக் கொடை என்றும், மதுவை உண்ணாமல் இருந்து கொடை கொடுப்பது இயற்கைக் கொடை” (புறநானூற்றில் தமிழர் பண்பாடு,ப.195) என்றும் கூறியதாக செ.பழனிச்சாமி தனது நூலில் கூறுகிறார்.

மலையமான் திருமுடிக்காரி தன்பால் வரும் பரிசிலர்களை வகைப்படுத்திக் கொண்டு கூடுதலாகவும், குறைவாகவும் கொடுக்காமல் வேற்றுமையின்றி எல்லோருக்கும் வாரி வாரி வழங்குவான். கபிலர் கொடுப்பது என்பது அரிய செயல் இல்லை அது சாதாரண மக்களுக்கும் இயல்வதே ஆகும். ஆனால் புலவர்களின் திறத்திற்கு ஏற்றவாறு வழங்குவதிலேயே அருமைப்பாடு அமைந்துள்ளது. எல்லாப் புலவர்களையும் ஒரே தகுதியினராக எண்ணி அனைவருக்கும் ஒரே மாதிரி தருகின்ற வழக்கத்தினை விட வேண்டும் என காரிக்கு உபதேசம் செய்கிறார்.

“...........................பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அதுநற்கு அறிந்தனை ஆயின்
பொதுநோக்கி ஒழிமதி புலவர் மாட்டே!”(புறம்.121:2-6)

என்றும் கபிலர் எடுத்துரைக்கிறார்.

“உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார் மேல்நிற்கும் புகழ்” (குறள்.232)

கொடையின் பயனாக அவர்கள் இரப்பார்க்கு உதவுவதே புகழாகும் என வள்ளுவர் உரைக்கிறார்.

.........................................இரங்கும் அருவிப்
பீடு கெழு மலையற் பாடியோரே(புறம்.124:5)

அதாவது நல்ல நாள் இல்லை என்றும், பறவைச் சகுனம் தீதாகத் தோன்றி தடுக்கும் என்றும், மன்னனைக் காணச் செல்வதற்கு இது காலம் இல்லை என்று சென்றாலும் அதனைப் பொருட்படுத்தாமல் காரியைப் பாடியவர்கள் வெறுங்கையுடன் திரும்பமாட்டார்கள்.

காரி வீரத்தில் மட்டுமன்று நெஞ்சின் ஈரத்திலும் நிகரில்லாதவனாக இருந்தான். (கடையேழு வள்ளல்கள், ப.31) என்பதை எம்.எஸ்.இரவிச்சந்திரன் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

மழையின் துளிகளை எண்ண முடிந்தாலும் அவன் கொடுத்த கொடைத் தேர்களின் எண்ணிக்கையை எண்ண முடியாது என்பதே அவனது கொடைச் சிறப்பினைப் பறைசாற்றுகின்றன.

தேர்வண் மலையனின் கொடைப்பண்பு

"திருமுடிக்காரிக்கு ஏனாதி திருக்கண்ணன், தேர்வண் மலையன் என்ற ஆண்மக்கள் இருவர் இருந்தனர்";(இலக்கியப் பேழை,ப.37) என்று க.நஞ்சையன் குறிப்பிட்டுள்ளார்.

"உழுத நோன் பகடு அழி தின்றாங்கு
நல் அமிழ்து ஆக, நீ நயந்து உண்ணும் நறவே
குன்றத்து அன்ன களிறு பெயர
கடந்து அட்டு வென்றோனும் நிற்கூறும்மே"(புறம்.125:7-10)

என்று பெருஞ்சாத்தனார் இம்மன்ன்னை, நீ உன்னுடைய வலிமையால் பகைவர்களை வென்று கிடைத்த பொருட்களையெல்லாம் எல்லோருக்கும் அளித்து விடுகிறாய். பின் நீ விரும்பியுண்ணும் கள் நல்ல அமிழ்தமாய் நீண்ட வாழ்நாளை உனக்குக் கொடுக்கட்டும் என்று பாடுகிறார்.

பாணர்களின் வறுமையினைப் போக்குவதற்காகத் தன்னிடம் உள்ள பொருள்களைக் கொடுக்கும் உள்ளம் குறுநில மன்னர்களிடம் இருக்கிறது. வேந்தர்களும், குறுநில மன்னர்களும் இரவலர்க்கு உணவும், பரிசிலும் பசியினாலும் வறுமையினாலும் வாடும் இரவலர்க்குக் கொடுத்த உயர்ந்த கொடைத்திறன் சுட்டப்படுகிறது. மனிதன் தன் வாழ்நாளில் முடிந்த அளவு பிறருக்குக் கொடையளித்த சிறப்பிற்குரியது. கொடை கொடுக்கும் போது மகிழ்வுடன் கொடுத்தனர் என்பதை அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. திருக்குறள்
2 .புறநானூறு
3. கடையேழு வள்ளல்கள்
4. தமிழரின் வாழ்வியல் நெறிகள்
5. சங்க காலத் தமிழக வரலாறு
6. கலித்தொகை
7. புறநானூற்றில் தமிழர் பண்பாடு
8. சங்க இலக்கியங்களில் அறக்கருத்துக்கள்